மக்கள் அமர நிழற்கூடாரம்



▶ கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மனு அளிக்க வரும் பொது மக்கள், மனு எழுதி தருவோரும் அமர நிழற்கூடாரம் அமைக்கப்படுகிறது.

மேட்டுப்பாளையம் - நெல்லித்துறை சாலையில்

தாறுமாறாக நிறுத்தப்படும் கனரக வாகனங்கள்

பக்தர்கள், வாகன ஓட்டிகள் அவதி

மேட்டுப்பாளையம், நவ.7: மேட்டுப்பாளையம் - நெல்லித்துறை சாலையில் உள்ள காந்தி மைதானம் பகுதியில் நூற்றுக்கணக்கான தனியார் உருளைக்கிழங்கு மற்றும் பூண்டு மண்டிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த தொழிலை நம்பி சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பணிபுரிந்து வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் விளையும் உருளைக்கிழங்கு மற்றும் பூண்டு இந்த மண்டிகளுக்கு லாரிகள் மூலமாக விற்பனைக்காக கொண்டு கொண்டு வரப்படுகின்றன. இதேபோல் ஆந்திரா,கர்நாடகா,குஜராத்,இமாச்சல பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு வெளி மாநிலங்களில் இருந்தும் உருளைக்கிழங்கு மற்றும் பூண்டு விற்பனைக்காக இந்த தனியார் மண்டிகளுக்கு லாரிகள் மூலமாக கொண்டு வரப்படுகின்றன. இப்பகுதியில் உருளைக்கிழங்கு மற்றும் பூண்டு லோடினை இறக்குவதற்காக வரும் லாரிகள் தாறுமாறாக நிறுத்தப்பட்டு வருகின்றன.

இந்த சாலையின் வழியாக தான் கோவை மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அம்மன் திருத்தலங்களில் ஒன்றான தேக்கம்பட்டி வனபத்ர காளியம்மன் கோவிலுக்கு செல்ல வேண்டும்.

இவ்வாறு லாரிகள் இப்பகுதியில் தாறுமாறாக நிறுத்தப்படுவதால் வனபத்திரகாளியம்மன் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் மற்றும் நெல்லித்துறை,தேக்கம்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் அவசர மருத்துவ உதவிக்காக மேட்டுப்பாளையம் வரும் வாகனங்கள் மற்றும் ஆம்புலன்சுகள் போக்குவரத்து நெரிசலில் சிக்கி அவதிக்குள்ளாகி வருகின்றன.



▶ நெல்லித்துறை சாலையில் தாறுமாறாக நிறுத்தப்பட்டுள்ள லாரிகள்.

இதனால் பல நேரங்களில் மற்ற வாகன ஓட்டிகளுக்கும்,தாறுமாறாக நிறுத்தப்படும் லாரிகளின் டிரைவர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டு வருகிறது.சில சமயங்களில் வாக்குவாதம் முற்றி கைகலப்பும் ஏற்படுகிறது. இதனை தவிர்க்க மேட்டுப்பாளையம் காவல்துறை சார்பில் பலமுறை லாரி டிரைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியும் போலீஸ் உத்தரவையும் மீறி மீண்டும் லாரிகள் வழக்கம் போல தாறுமாறாக நடத்தப்பட்டு வருகின்றன.இதனால் அவ்வழியே செல்லும் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் கடும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். எனவே,காந்தி மைதானம் பகுதியில் நிறுத்தப்படும் லாரிகளை முறையாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்து வருகிறது.

இதுகுறித்து மேட்டுப்பாளையம் போலீசார் கூறுகையில்,“காந்தி மைதானம் பகுதியில் உருளைக்கிழங்கு மற்றும் பூண்டு லோடினை இறக்க வரும் டிரைவர்கள் தங்களது வாகனங்களை இப்பகுதியில் தாறுமாறாக நிறுத்தி வருகின்றனர்.இதுகுறித்து புகார் வந்த வண்ணம் இருந்த நிலையில் லாரிகளின் டிரைவர்களை அழைத்து லாரிகளை முறையாக சாலையின் ஓரம் நிறுத்த வேண்டும்.பின்னர்,தான் லோடினை இறக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.இருந்தாலும் காவல்துறை உத்தரவையும் மீறி இதுபோன்ற செயல்களில் சில டிரைவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இனி வரும் காலங்களில் இதுபோன்ற நிகழ்வில் டிரைவர்கள் ஈடுபடும் பட்சத்தில் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என எச்சரித்துள்ளனர்.

தீபாவளி பண்டிகைக்கு

தோட்டத்தொழிலாளர்களுக்கு சிறப்பு விடுமுறை அளிக்க வேண்டும்

13 தொழிற்சங்கங்கள் கோரிக்கை

கோவை, நவ. 7: தீபாவளி பண்டிகைக்கு தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு சிறப்பு விடுமுறை அளிக்க வேண்டும் என 13 தொழிற்சங்கங்கள் கோரிக்கைவிடுத்துள்ளன.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோவை, நீலகிரி, மதுரை மாவட்டங்கள் மற்றும் ஹைவேவிஸ் உள்ளிட்ட தேயிலை தோட்ட பகுதிகளில் பணிபுரியும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு சிறப்பு விடுமுறை வழங்கவேண்டும் என தமிழ்நாடு தேயிலை தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இதுதொடர்பாக தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு தலைவர் வால்பாறை வி.அமீது தலைமையில், தொழிற்சங்க நிர்வாகிகள் சவுந்தர பாண்டியன், வினோத்குமார், நீலகிரியை சேர்ந்த மாடசாமி, விஜயகுமார், கேசவமருகன், வீரமணி, கருப்பையா, மோகன், கல்யாணி, வர்க்கீஸ், தங்கவேல் உள்ளிட்ட 13 தொழிற்சங்கத்தினர் கையெழுத்திட்டு கோரிக்கை மனுவை தமிழ்நாடு தோட்ட அதிபர்கள் சங்க நிர்வாகிகள் மற்றும் ஆனைமலை தோட்ட அதிபர்கள் சங்க நிர்வாகிகளிடம் வழங்கியுள்ளனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

தீபாவளி பண்டிகையை தேயிலை தோட்ட தொழிலாளர்கள் தித்திக்கும் தீபாவளியாக கொண்டாடும் வகையில் தீபாவளிக்கு முந்தைய நாள் சனிக்கிழமை மதியம் 12 மணியுடன் அரை நாள் விடுமுறையும், தீபாவளிக்கு அடுத்த நாள் திங்கட்கிழமை ஒரு நாள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையும் வழங்க வேண்டும். தொழிற்சங்க கூட்டமைப்பின் இந்த கோரிக்கையை, தோட்ட நிர்வாகங்கள் ஏற்றுக்கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டுகிறோம். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

தூய்மை பணியாளர்களுக்கு தீபாவளி பரிசு



கோவை, நவ. 7: கோவை டவுன்ஹால் பகுதியில் த.வெ.க. சார்பில் 82, 83 வார்டு தூய்மை பணியாளர்கள் 230 பேருக்கு தீபாவளியை முன்னிட்டு பட்டாசு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் தெற்கு தொகுதி பொறுப்பாளர் ராம்குமார், மாவட்ட துணை செயலாளர் உன்னி கிருஷ்ணன், பகுதி செயலாளர் டவுன்ஹால் சதீஷ், வார்டு செயலாளர் மணிகண்டன் மற்றும் கோவை ஜியா, படையப்பா செந்தில், மோகனா, ஹரி, கணேசன், விஜய், நவுபல், கவுசல்யா, ராஜேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கோவை ரயில் நிலையத்தில்

மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்களுக்கான ‘வழி’ உதவி மையம்

டிசம்பர் 3ம் தேதி தொடக்கம்



கோவை, நவ. 7: கோவை ரயில் நிலையத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் எவ்வித சிரமமுமின்றி பாதுகாப்பாகவும், கண்ணியத்துடனும் பயணிக்கும் வகையில் ‘வழி’ என்ற பெயரில் 24 மணி நேர சிறப்பு உதவி மையம் தொடங்கப்பட உள்ளது.

பொதுப்பயன்பாட்டு இடங்களில் அனைவருக்கும் சமமான வசதிகளை உருவாக்கும் நோக்கில், மறைந்த கே.எஸ்.விஸ்வநாதன் நினைவாகத் தொடங்கப்பட்டுள்ள ‘விஸ்வநாதன் சுடலைமுத்து அறக்கட்டளை’ மற்றும் ‘சுவர்கா அறக்கட்டளை’ ஆகியவை இணைந்து இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

தென்னக ரயில்வே மற்றும் ஒன்றிய ரயில்வே அமைச்சகத்தின் அதிகாரப்பூர்வ ஒப்புதலுடன் செயல்படுத்தப்படும் இந்த உதவி மையம், சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான டிசம்பர் 3-ம் தேதி முறைப்படி பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

ரயில் நிலையத்தின் பிரதான நுழைவு வாயிலிலேயே இந்த ‘வழி’ உதவி மையம் அமைக்கப்படுகிறது. பயணிகள் உள்ளே நுழையும்போதே எளிதில் அணுகும் வகையில் அமையவுள்ள இம்மையத்தில், 12 மணி நேர சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். முதியவர்கள், பார்வையற்றோர், செவித்திறன் குறைபாடுடையோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான சக்கர நாற்காலி உதவிகள் மற்றும் நடைமேடை வரை சென்று ரயிலில் ஏறுவதற்கான முழுமையான வழிகாட்டுதல்கள் இதன் மூலம் வழங்கப்படும். இதன் மூலம் நாள்தோறும் 100-க்கும் மேற்பட்ட பயணிகள் நேரடியாகப் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து விஸ்வநாதன் சுடலைமுத்து அறக்கட்டளையின் அறங்காவலர் சுரேஷ் குமார் கூறுகையில்,“ இந்த உதவி மையம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்குத் தன்னம்பிக்கையையும் சுதந்திரமான பயணத்தையும் வழங்கும். இச்சேவையை எதிர்காலத்தில் நாட்டின் பல்வேறு முக்கிய ரயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்துவதே எங்களது நோக்கம்” என்றார்.

சுவர்கா அறக்கட்டளையின் நிறுவனர் ஸ்வர்ணலதா மற்றும் நிர்வாகி குருபாதம் ஆகியோர் கூறுகையில், “விமான நிலையங்களில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கு வழங்கப்படும் உடனடி உதவி மற்றும் வழிகாட்டுதல்கள் போன்றே, இங்கும் அனைத்து வசதிகளும் கிடைக்க செய்வதே இதன் முக்கிய நோக்கம். இதற்காக ரயில்வே நிர்வாகம் நுழைவு வாயிலிலேயே முக்கிய இடத்தை ஒதுக்கித் தந்துள்ளது” என்றனர்.

மொபைல் கழிவறை அமைக்க பொது மக்கள் கோரிக்கை

கோவை, நவ.7: கோவை அரசு மருத்துவமனை பஸ் ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன் லங்கா கார்னர் பகுதிக்கு தினமும் பல ஆயிரம்பேர் வந்து செல்கிறார்கள். ரயில் பயணிகள் சிலர் ரயில் நிலையம் செல்லும் முன்பு, லங்கா கார்னர் பகுதியில் உள்ள வளைவு பகுதியை திறந்த வெளி கழிப்பிடமாக பயன்படுத்தி வருகிறார்கள். இங்கே மாநகராட்சி நிர்வாகத்தினர் வாரம் ஒரு முறை பிளீச்சிங் பவுடர் போட்டு சுத்தம் செய்கிறார்கள். ஆனாலும் இங்கே திறந்த வெளியில் சிலர் சிறுநீர் கழிக்கிறார்கள். அரசு மருத்துவமனைக்கு தினமும் பல ஆயிரம் வந்து செல்லும் நிலையில் பஸ் ஸ்டாண்ட் பகுதியில் ஒரு கழிவறை இருக்கிறது. ஆனால் இதுபோதுமானதாக இல்லை.

லங்கா கார்னர் பாலத்தின் மறைவான இடத்தை சிலர் திறந்த வெளி கழிவறையாக சிலர் பயன்படுத்தி வருகிறார்கள். இங்கே கழிவறை அமைக்க வேண்டும், இல்லாவிட்டால் மொபைல் டாய்லெட் வாகனத்தை வைக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரசு கலைக்கல்லூரி ரோட்டில் நடைபாதையில் சிலர் தங்கியிருக்கிறார்கள். இவர்களில் பலர், ரோட்டோரத்தைதிறந்த வெளி கழிவறையாக பயன்படுத்தி வருகிறார்கள். இதே வளாகத்தை அவர்கள் தூங்குவதற்கும் பயன்படுத்தி வருகின்றனர். இங்கே நடமாடும் கழிவறை வைக்க மாநகராட்சி நிர்வாகம் முன் வரவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போக்குவரத்துக்கு இடையூறாக

வாகனம் நிறுத்தியதை தட்டி கேட்ட போலீசாரிடம் தகராறு

தையல் கடைக்காரர், பெண் மீது வழக்கு

கோவை, நவ. 7: கோவை சிங்காநல்லூர் காமராஜர் ரோடு பகுதி பேருந்து நிலையம் மற்றும் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைந்துள்ளதால் எப்போதும் வாகன போக்குவரத்தும், பொதுமக்கள் நடமாட்டமும் மிகுந்த பகுதியாக காணப்படும்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அந்த பகுதியில் போலீசார் போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு எதிரே உள்ள லோட்டஸ் டெய்லர் கடை முன்பாக கார் ஒன்று சாலையை ஆக்கிரமித்து போக்குவரத்துக்கு இடையூறாக தாறுமாறாக நிறுத்தப்பட்டிருந்தது. இதனால், அந்த சாலையில் வாகனங்கள் செல்ல முடியாமல் கடும் நெரிசல் ஏற்பட்டது.

இதைக்கவனித்த போக்குவரத்து போலீசார், வாகனத்தை உடனடியாக அங்கிருந்து எடுத்து முறையாக பார்க்கிங் செய்யுமாறு அறிவுறுத்தினர். அப்போது அங்கு வந்த டெய்லர் கடை உரிமையாளர் தங்கவேல் மற்றும் அவருடன் இருந்த பெண் ஒருவர் போலீசாரின் பேச்சைக் கேட்காமல், போலீசாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு தகராறு செய்தனர்.

பொதுமக்கள் முன்னிலையில் அவர்கள் ரகளையில் ஈடுபட்டதால் அந்த பகுதியில் மேலும் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதையடுத்து போலீசார் அந்த வாகனத்தை அங்கிருந்து அதிரடியாக அப்புறப்படுத்தினர். தொடர்ந்து அரசுப் பணியை செய்யவிடாமல் தடுத்து, பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுத்திய தையல் கடைக்காரர் தங்கவேல் மற்றும் அந்த அடையாளம் தெரியாத பெண் ஆகிய இருவர் மீதும் சிங்காநல்லூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(முன்னர் எக்விடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
பெருநிறுவன அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002. போன் : 044-42995000, 044-42995050

சுவாதீன அறிவிப்பு
2002 கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள், விதி 8 (1)
(அசையா சொத்துக்காக)

கம்பெனிகளின் சட்டம் 1956-ன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமான M/s.எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் மற்றும் கம்பெனிகளின் சட்டம் 2013 பிரிவு 2 (20) மற்றும் பேங்கிங் கம்பெனி, வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949 பிரிவு 5 (C)-ன் கீழ் பதிவு அலுவலகம் 4வது தளம், பேஸ்-II, ஸ்பென்சர் பிளாசா, 769, அண்ணாசாலை, சென்னை - 600 002 மற்றும் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் கிளை அலுவலகம் கொண்டுள்ள கீழே கையொப்பமிட்டுள்ளவர் அங்கீகாரம் பெற்ற அதிகாரியாக இருக்கின்றபடியால் 2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)-ன் மற்றும் விதி 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்தமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கடன் தொகையை திருப்பி செலுத்த தவறியதால் குறிப்பாக கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்குறிப்பிட்ட சட்டம், பிரிவு 13 (4) விதி 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது. குறிப்பாக கடன்தாரர் / இணைகடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பரிவர்த்தனை வைத்து கொண்டால் அது கடன்தாரர் செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் அதற்குண்டான வட்டியுடன் சேர்த்து M/s.எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும்.

வ.எண்.1: கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர்: கடன்தாரர்கள்: 1. திருமதி.M. மஞ்சுளா நடராஜ் மற்றும் 2.திரு.S.மதன்குமார் செல்வராஜ், (கடன் எண்.700006872703 & 700006880239), கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை: 20/08/2026 மேலும் **19.08.2026** அன்று வரை **ரூ.18,76,625/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து அறுநூற்று இருபத்து ஐந்து மட்டும்)** ஒப்பந்தத்தின் படி தொடர்புடைய வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள், செலவுகள் மற்றும் பல சேர்த்து இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

கடனீட்டுச் சொத்துக்களின் அட்டவணை: திருமதி.M. மஞ்சுளா நடராஜ் அவர்களுக்கு சொந்தமான சொத்து. திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் துணைப் பதிவு மாவட்டத்திற்குட்பட்ட பல்லடம் தாலுகா, பல்லடம் பஞ்சாயத்து, பா.வடுகபாளையம் கிராமத்தில், சர்வே புல எண்.91-ன்படி 9.80 ஏக்கர் நிலத்தில இதில் உட்பிரிவு செய்யப்பட்டதின்படி சர்வே புல எண்.91/1B-ன்படி 1.95¼ ஏக்கர் பரப்பளவு நிலம், சர்வே புவ எண்.91/2B-ன்படி 0.07½ ஏக்கர் நிலம் மொத்தம் சேர்த்து 2.03 ஏக்கர் பரப்பளவு நிலம் பல்வேறு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு, “வெற்றி நகர்” என பெயரிடப்பட்டுள்ள மனை பிரிவு மற்றும் திருப்பூர் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரால் ஒப்புதல் எண்.433/2022-ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில், வடக்கு பகுதியில் உள்ள மனை எண்.28-ல் உள்ள 225 சதுர அடி நிலம் கீழ்க்கண்ட எல்லைகளுக்குட்பட்டது. மனை எண்.28-ன் பகுதிக்கு வடக்கே, மனை எண்.29-ன் பகுதிக்கு தெற்கே, 7.2 மீட்டர் அகல வடக்கு தெற்கு மனைப்பிரிவு சாலைக்கு கிழக்கே, மனை எண்.23-க்கு மேற்கே. **அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கில்: 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கில்: 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கில்: 4½ அடி, வடக்கு தெற்காக மேற்கில்: 4½ அடி மொத்தம் 225 சதுர அடி பரப்பளவு நிலம். மேலும், தெற்கு பகுதியில் மனை எண்.29-ல் உள்ள 775 சதுர அடி பரப்பளவு நிலம் கீழ்க்கண்ட எல்லைகளுக்குட்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட மனை எண்.28-ன் பகுதிக்கு வடக்கே, மனை எண்.29-ன் பகுதிக்கு தெற்கே, 7.2 மீட்டர் அகல வடக்கு தெற்கு மனைப்பிரிவு சாலைக்கு கிழக்கே, மனை எண்.22-க்கு மேற்கே. **அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கில்: 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கில்: 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கில்: 15½ அடி, வடக்கு தெற்காக மேற்கில்: 15½ அடி மொத்தம் 775 சதுர அடி பரப்பளவு நிலம். இரண்டு மனைகளும் சேர்த்து மொத்தம் (225 + 775 = 1000 சதுர அடி) அல்லது 92.90 சதுர மீட்டர் காலி வீட்டு மனை அதனுடன் மனை பிரிவு பொது சாலை பயன்படுத்தும் உரிமை மற்றும் அனைத்து பிற பொது வசதிகள் உட்பட. இந்த மனை சர்வே புல எண்.91/1B-ல் உள்ள மற்றும் அதனுடன் அனைத்து பிற வழக்கமான உரிமைகள் மற்றும் அனைத்து கட்டிடங்கள் மற்றும் அங்கு நிலத்தில் தற்போது அல்லது நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள கட்டுமானங்கள் மற்றும் பூமியில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிலத்தில் நிலையாக பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருட்கள் தற்போதும் எதிர்காலத்திற்கும் சேர்ந்தது மற்றும் அனைத்து வசதி உரிமைகள் / வழக்கமான உரிமைகள் உட்பட.

வ.எண்.2: கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர்: கடன்தாரர்கள்: 1. திருமதி. M. ஸ்ரீ கற்பகாம்பிகாள் மற்றும் 2. திரு.K. மருதாசலம், (கடன் கணக்கு எண்கள். 700012413738 & 700012413740), கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை: 20/08/2026 மேலும் **19.08.2026** அன்று வரை **ரூ. 12,04,491/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து நான்காயிரத்து நானூற்று தொண்ணூற்று ஒன்று மட்டும்)** ஒப்பந்தத்தின் படி தொடர்புடைய வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள், செலவுகள் மற்றும் பல சேர்த்து இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

கடனீட்டு சொத்துக்களின் அட்டவணை: திருமதி.M. ஸ்ரீ கற்பகாம்பிகாள் அவர்களுக்கு சொந்தமான சொத்து: கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், நம்பியூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட ஈரோடு மாவட்டம், நம்பியூர் தாலுகா, பொலவபாளையம் கிராமத்தில், மறுசர்வே எண்.131/1-ன்படி புஞ்சை ஹெக்டேர் 1.41.0 (உட்பிரிவு மறுசர்வே எண்.131/1B2), மறுசர்வே எண்.131/2-ன்படி புஞ்சை ஹெக்டேர் 0.46.0 (உட்பிரிவு மறுசர்வே எண்.131/2B1), மறுசர்வே எண்.131/5-ன்படி புஞ்சை ஹெக்டேர் 0.82.0 (உட்பிரிவு எண்.131/5A), மறுசர்வே எண்.131/6-ன்படி புஞ்சை ஹெக்டேர் 0.19.5 (உட்பிரிவு மறுசர்வே எண்.131/6A), மறுசர்வே எண்.131/7-ன்படி புஞ்சை ஹெக்டேர் 0.03.0 மறுசர்வே எண்.131/8-ன்படி புஞ்சை ஹெக்டேர் 1.05.0 இந்த நிலங்கள் தற்போது ஒன்றிணைக்கப்பட்டு, மறுசர்வே எண்.131/1B2-ன்படி புஞ்சை ஹெக்டேர் 1.24.78, புஞ்சை ஏக்கர் 3.08 சென்ட் நிலம் பல்வேறு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு “சூர்யா கார்டன்” என பெயரிடப்பட்டு ஈரோடு மாவட்ட நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் துணை இயக்குநரால் ம.வ./ந.உ(இ.ம)எண்.98/2020-ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ள மனை பிரிவில் மனை எண்.32-ன் தெற்கு பகுதியில் உள்ள 1027½ சதுர அடி பரப்பளவு வீட்டுமனை கீழ்க்கண்ட எல்லைகளுக்குட்பட்டது. வடக்கில்: வீட்டுமனை எண்.32-ன் வடக்கு புறப் பகுதி, தெற்கில்: 10.00 மீட்டர் அகல கிழக்கு மேற்காக மனைப்பிரிவு சாலை, கிழக்கில்: 9.00 மீட்டர் அகல தெற்கு வடக்காக மனைப்பிரிவு சாலை, மேற்கில்: சர்வே புல எண்.131/2A-ல் உள்ள நிலம். மேற்குறிப்பிட்டுள்ள எல்லைகளுக்குள் அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 40 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பகுதியில்: 20 அடி, அதன்பிறகு வடக்கு பகுதியில் குறுக்கு 5 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 35 அடி, தெற்கு வடக்காக மேற்கு பகுதியில்: 25 அடி மொத்தப்பரப்பளவு 1027½ சதுர அடி வீட்டுமனை அதனுடன் வழக்கமான நடைபாதை, பொதுச் சாலை, பொது உரிமைகள் மற்றும் பல. இதன் தற்போதைய உட்பிரிவு Kasa.எண்.131/1B2A1A1A1 (பட்டா எண்.537) மற்றும் அங்கு நிலத்தில் தற்போது அல்லது நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள கட்டுமானங்கள் மற்றும் பூமியில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிலத்தில் நிலையாக பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருட்கள் தற்போதும் எதிர்காலத்திற்கும் சேர்ந்தது மற்றும் அனைத்து வசதி உரிமைகள் / வழக்கமான உரிமைகள் உட்பட.

வ.எண்.3: கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர்: கடன்தாரர்கள்: 1. திரு.C.அர்ஜுன்சுனில் ஆதித்தன் மற்றும் 2. Ms. சிவகாமி வடிவேல், (கடன் கணக்கு எண்கள். 700011735514 & 700011735527), கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை: 20/08/2026 மேலும் **20.08.2026** அன்று வரை **ரூ. 31,41,656/- (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து நாற்பத்து ஓராயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஆறு மட்டும்)** ஒப்பந்தத்தின் படி தொடர்புடைய வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள், செலவுகள் மற்றும் பல சேர்த்து இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

கடனீட்டு சொத்துக்களின் அட்டவணை: திரு.C.அர்ஜுன்சுனில் ஆதித்தன் அவர்களுக்கு சொந்தமான சொத்து: ஈரோடு பதிவு மாவட்டம், அவல்பூந்துறை துணைப் பதிவு மாவட்டத்திற்குட்பட்ட பெருந்துறை தாலுகா, வடமுகம் வெள்ளோடு கிராமத்தில், மறுசர்வே எண்.443/2-ன்படி புஞ்சை ஹெக்டேர் 1.72.5, தீர்வை ரூ.4.77 இதில் புஞ்சை நிலம் ஏக்கர் 4.26 நிலம் கீழ்க்கண்ட எல்லைகளைகளுக்குட்பட்டது. கிழக்கில்: மறுசர்வே எண்.444, மேற்கில்: மறுசர்வே எண்.443/1, வடக்கில்: மறுசர்வே எண்கள்.446, 448, 449, தெற்கில்: மறுசர்வே எண்.443/3A-ல் உள்ள கிழக்கு மேற்காக பொதுப்பாதை. தற்போது உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு மறுசர்வே எண்கள்.443/3A1, 443/3A2 இந்த புஞ்சை ஏக்கர் 4.26 சென்ட் நிலம் பல்வேறு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு மற்றும் இந்த மனை பிரிவு நகர் ஊரமைப்பு துணை ஆணையரால் அளிக்கப்பட்ட அங்கீகார எண்.274/2023 மற்றும் சென்னிமலை தாலுகா, வடமுகம் வெள்ளோடு கிராம பஞ்சாயத்து ஊராட்சித் தலைவரால் 21.07.2023 தேதியிட்ட ந.க.எண்.08/2023-2024, இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு “ஸ்ரீ வாராஹி ஸ்மார்ட் சிட்டி பேஸ்-II” எனப் பெயரிடப்பட்டு இதில், மனை எண்.14-ன் தெற்கு பகுதியில் உள்ள 2746 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் அனைத்து பிற இணைக்கப்பட்டுள்ள உடைமைகள் உள்ள சொத்து கீழ்க்கண்ட எல்லைகளுக்குட்பட்டது. கிழக்கில்: 24 அடி அகல தெற்கு வடக்காக பொது சாலை, மேற்கில்: மனை எண்.9, வடக்கில்: மனை எண்.14-ன் வடக்கு பகுதி, தெற்கில்: சர்வே புல எண்.443/3A1D மற்றும் அளவுகள்: வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில்: 50 அடி 5 அங்குலம், வடக்கு தெற்காக மேற்கு பகுதியில்: 31 அடி 8 அங்குலம், கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 65 அடி 0 அங்குலம், கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில்: 67 அடி 8 அங்குலம், அதனுடன் வழக்கமான நடைபாதை மற்றும் சுவாதீன உரிமைகள் உட்பட. இந்த சொத்து மறுசர்வே எண்.443/2-ல் உள்ளது. அதன் பிறகு உட்பிரிவு செய்யப்பட்டு மேற்படி சொத்து தற்போது மறுசர்வே எண்.443/2A7F-ல் உள்ளது மற்றும் வடமுகம் வெள்ளோடு கிராம ஊராட்சி எல்லைக்குட்பட்டது. மேலும் அதனுடன் உள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் அங்கு நிலத்தில் தற்போது அல்லது நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள கட்டுமானங்கள் மற்றும் பூமியில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிலத்தில் நிலையாக பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருட்கள் தற்போதும் எதிர்காலத்திற்கும் சேர்ந்தது மற்றும் அனைத்து வசதி உரிமைகள் / வழக்கமான உரிமைகள் உட்பட.

தேதி : 04.11.2026
இடம்: வ.எண்.1: திருப்பூர் மாவட்டம்
வ.எண்.2 & 3: ஈரோடு மாவட்டம்

அதிகாரப்பூர்வ அலுவலர்,
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா–411014. கிளை அலகு: 24/C5, முதல் தளம், செல்லையா நாடார் டவர்ஸ், எஸ்.என்.பிரதான சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகில், திருநெல்வேலி, தமிழ்நாடு–627001

மின்–ஏலம்– விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக 23.11.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
4	கடன் எண் LAP0118200000005027143 சின்னசாமி சுப்ரமணியம், (கடன்தாரர்), பவித்ரா சின்னசாமி (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 09.04.2025 09–04–2025 தேதியின்படி மொத்த நிலுவை ரூ.1301606/– (ரூபாய் பதின்மூன்று லட்சத்து ஆயிரம் அறுநூற்று ஆறு மட்டும்) மற்றும் அதனுடன் தொகை முழுமையாக வசூலிக்கப்படும் வரை ஆண்டுக்கு 17.35 % என்ற விகிதத்தில் வட்டியும் செலுத்தப்பட வேண்டும்.	நேரடி	திருப்பூர் பதிவு மாவட்டம், நல்லூர் துணைப் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலுகா, வீரபாண்டி கிராமத்தில், சர்வே எண் 444–இல், 21.06 ஏக்கர் பரப்பளவில், இதன் கிழக்குப் பகுதியில் தற்போதைய உட்பிரிவு எண் 444/3–இல் 15.00 ஏக்கர் பரப்பளவில், இதில் விற்கப்பட்ட சொத்து 4.77 ஏக்கர் நீங்கலாகவும், மீதமுள்ள சொத்து 10.23 ஏக்கர் பரப்பளவிலும் உள்ள நிலங்கள் “பூங்கா நகர்” என்ற பெயரில் ஒரு மனைப்பிரிவாக மாற்றப்பட்டன. இதில், 1200 சதுர அடி பரப்பளவுள்ள மனை எண் 89, ஒரு கட்டிடத்துடன் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது. வடக்கே: 25 அடி கிழக்கு–மேற்கு மனைப்பிரிவு சாலை, தெற்கே மனை எண் 98, கிழக்கே மனை எண் 88, மேற்கே மனை எண் 90.	1554000.00/- (ரூபாய் பதினைந்து லட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்)	Rs. 155400.00/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நானூறு மட்டும்)	20-11-2026 Before 5 PM	10,000/-	16-11-2026 (11AM – 4PM)	23-11-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை
5	கடன் எண் LAP0118200000005057638 & HL0011820000000505660 8 சையத் சுல்தான் பீவி, மனைவி மற்றும் சட்டப்பூர்வ வாரிசு சௌகத் அலி (இறந்ததில் இருந்து), (கடன்தாரர்), கதீஜா ஜபார், தாய் மற்றும் சட்டப்பூர்வ வாரிசு சௌகத் அலி (இறந்ததில் இருந்து) (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 09–06–2026 மொத்தம் செலுத்த வேண்டிய தொகை: ரூ.1537226.00 /– (ரூபாய் பதினைந்து லட்சத்து முப்பத்தேழு ஆயிரத்து இருநூற்று இருபத்தாறு மட்டும்) இதில் கடன் கணக்கு எண். LAP0118200000005057638 இன்படி ரூ.590954.00/– கடன் கணக்கு எண். HL0011820000005056608 இன்படி ரூ. 946272.00/– ஆகியவை மற்றும் 09–06–2026 அன்று செலுத்தப்பட வேண்டிய இத்தொகையுடன், திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான வட்டி முறையே ஆண்டுக்கு 17.35% மற்றும் 15.10% சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.	நேரடி	திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் துணைப் பதிவு மாவட்டம், பல்லடம் தாலுகா, வடுகபாளையம் கிராமம், 25/08/2026, சர்வே எண் 85/3–இல் 3.14 ஏக்கர் பரப்பளவு, இதில் 1.14 ஏக்கர் துணைப் பிரிவு எண் 85/3a–விலும், சர்வே எண் 85/4–இல் 4.45 ஏக்கர் பரப்பளவும் அமைந்துள்ளன. இந்த நிலங்கள், மனை எண் 184 பகுதியில் 1247–1/2 சதுர அடி பரப்பளவில் “திருவள்ளுவர் நகர்” என்ற பெயரில் ஒரு மனைப்பிரிவாக மாற்றப்பட்டுள்ளன. இது பின்வரும் எல்லைகளுக்குள் ஒரு கட்டிடத்துடன் அமைந்துள்ளது:– வடக்கே – சர்வே எண் 84–இல் உள்ள நிலங்கள், தெற்கே 23 அடி கிழக்கு–மேற்கு சாலை, கிழக்கே – மனை எண் 184–இன் மீதமுள்ள பகுதி, மேற்கே – மனை எண் 185. அளவுகள்:– இருபுறமும் கிழக்கு–மேற்காக – 20 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கு–தெற்காக – 63 ¾ அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கு–தெற்காக – 61 அடி, பாதை, வண்டித் தடம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மற்ற அனைத்து துணைக்கருவிகளையும் பயன்படுத்துவதற்கான உரிமையுடன்.	Rs. 1645228.00/- (ரூபாய் பதினாறு லட்சத்து நாற்பத் தைந்தாயிரத்து இருநூற்று இருபத்தெட்டு மட்டும்)	Rs. 164522.80/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து ஐந்நூற்று இருபத்திரண்டு மற்றும் பைசா எண்பது மட்டும்)	20-11-2026 Before 5 PM	10,000/-	16-11-2026 (11AM – 4PM)	23-11-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, **செல்பேசி எண்.+91 9597907666, மின்னஞ்சல் முகவரி:** baskaran.soundarrajan@grihumhousing.com மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஷ்ச்சீல் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 20.11.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை முகவரி : 24/C5, முதல் தளம், செல்லையா நாடார் டவர்ஸ், எஸ்.என்.பிரதான சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகில், திருநெல்வேலி, தமிழ்நாடு–627001, செல்பேசி எண்.+91 82811 38143, செல்பேசி எண்.9597907666, மின்னஞ்சல் முகவரி: baskaran.soundarrajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 07.11.2026
இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்